# செய்தி

வடக்கு மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சையானது எதிர்வரும் **2024.12.22ம்** திகதி **ஞாயிற்றுக்கிழமை** வடக்கு மாகாணத்தின் யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, கிளிநொச்சி ஆகிய நான்கு மாவட்டங்களிலும் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் நடாத்தப்படும். இப்பரீட்சைக்குரிய அனுமதி அட்டைகள் பரீட்சார்த்திகளுக்கு வடக்கு மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுவினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

குறித்த பரீட்சைக்கு விண்ணப்பித்து, ***2024.12.18ம் திகதிக்கு முன்னர்*** பரீட்சைக்கான அனுமதி அட்டை கிடைக்கப்பெறாதவர்கள் 2024.12.18 – 2024.12.20ம் திகதி வரையான காலப்பகுதியில் அலுவலக நேரத்தினுள் **021 - 2219939 என்ற மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுவின் பரீட்சைப் பிரிவின் தொலைபேசி இலக்கத்துடன் மாத்திரம்** தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

மேலும், பரீட்சைக்கான அனுமதி அட்டை கிடைக்கப்பெற்றவுடன் அதில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களைச் சரிபார்த்து மறுபக்கத்தில் கோரப்படும் விபரங்களை உடனடியாகப் பூரணப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். **முழுமையாகப் பூரணப்படுத்தப்படாத அனுமதி அட்டையுடன் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு வருகைதரும் பரீட்சார்த்திகள் எக்காரணம் கொண்டும் பரீட்சை எழுதுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்** என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

எவ்வாறாயினும், மேற்குறித்த பரீட்சை தொடர்பில் யாதாயினும் தெளிவுபடுத்தல்கள் தேவைப்படும் பரீட்சார்த்திகள் 021 - 2219939 **என்ற மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுவின் பரீட்சைப் பிரிவின் தொலைபேசி இலக்கத்துடன் மாத்திரம்** தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

சி.திருவாகரன்
செயலாளர்
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு
வடமாகாணம்